## அலங்கார வேங்கடவர்

## வாழி திருநாமம்

திருமருவும் விஞ்சை நகர் செழிக்க வந்தோன் வாழியே
ஶ்ரீபாடியகாரர் அடி சேர்ந்துய்ந்தோன் வாழியே
அருளாள மாமுனிவன் அருள் மைந்தன் வாழியே
அருமறை நூல் மாறன் உரை ஆய்ந்துரைப்போன் வாழியே
மருளில் திருமலை நம்பி மணவாளன் வாழியே
மார்கழியில் ஆதிரை நாள் மகிழ்ந்துதித்தோன் வாழியே
திருவரங்கர் தாளிணை என்றும் பகர்வோன் வாழியே
திருவேங்கடாசிரியன் திருவடிகள் வாழியே

---